දුරස්ථ හා අඛණ්ඩ අධ්‍යාපන කේන්ද්‍රය පේරාදෙණිය විශ්වවිද්‍යාලය
தொடர் தொலைக் கல்விநிலையம் - பேராதனைப் பல்கலைக்கழகம்
CENTRE FOR DISTANCE & CONTINUING EDUCATION – UNIVERSITY OF PERADENIYA

## பொதுக்கலைமானித் தேர்வு (வெளிவாரி) - மார்கழி 2018

## ECG 1: பொருளியல் I (பழைய பாடத்திட்டம்)

**அறிவுறுத்தல்கள்:**

- ஒவ்வொரு பகுதியிலிருந்தும் குறைந்தபட்சம் இரு வினாக்களையேனும் தெரிவு செய்து எல்லாமாக **நான்கு (04)** வினாக்களுக்கு மட்டும் விடையளிக்குக.
- இவ்வினாத்தாளில் உள்ள வினாக்களின் மொத்த எண்ணிக்கை எட்டு **(08)** ஆகும்.
- ஒவ்வொரு வினாவுக்கும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளவாறே புள்ளிகள் ஒதுக்கப்பட்டுள்ளன.
- வரைபடத்தாள்கள் வழங்கப்படும், கணிப்பான்கள் அனுமதிக்கப்படுகின்றன.
- ஒதுக்கப்பட்ட நேரம்: **மூன்று (03)** மணித்தியாலயங்கள்.

---

### பகுதி I

1 X, Y என்னும் இரு பொருட்களைக் கொள்வனவு செய்ய விரும்புகின்ற ஒரு நுகர்வோனின் மாதாந்த வருமானம் ரூபா 84.00 ஆகும். X, Y யின் மொத்தப் பயன் சார்புகள் முறையே பின்வரும் சமன்பாடுகளால் தரப்பட்டுள்ளன.

$$TU_x = 92X - 2X^2$$

$$TU_y = 40Y - 2Y^2$$

X பொருளின் விலை ($P_x$) ரூபா 20.00 எனவும் Y பொருளின் விலை ($P_y$) ரூபா 4.00 எனவும் கருதிக் கொள்க.

i. X, Y ஆகிய இரு பண்டங்களினதும் சமனிலைக் கொள்வனவுத் தொகைகளைத் தருவிக்குக. (10 புள்ளிகள்)

ii. Y பண்டத்திற்கான X இன் எல்லைப் பதிலீட்டுவீதத்தினை (MRSxy) தருவிப்பதுடன் சமனிலையில் இந்தத் தனிநபரின் எல்லைப் பதிலீட்டுவீதப் (MRSxy) பெறுமதியைக் கணிப்பிடுக. (05 புள்ளிகள்)

iii. சமனிலையில் பணத்தின் எல்லைப்பயனைக் ($MU_m$) கணிப்பிடுக. (05 புள்ளிகள்)

iv. ஏனையவை மாறாதபோது, இந்நுகர்வோனின் மாதாந்த வருமானம் ரூபா 188.00 ஆக அதிகரிக்கின்றது எனக்கருதுக. இந்நுகர்வோனின் X, Y ஆகிய இரு பண்டங்களினதும் புதிய சமனிலைக் கொள்வனவுத் தொகைகள் என்னவாக இருக்க வேண்டும்? (05 புள்ளிகள்)

2 i. நுகர்வோர் கேள்விக் கோட்பாட்டில் பயன் அணுகுமுறைக்கும் சமப்பயன் வளையி அணுகுமுறைக்கும் இடையிலான தொடர்பினை விளக்குக. (12 புள்ளிகள்)

ii. இந்த இரண்டு அணுகுமுறைகளிலும் எது விரும்பத்தக்கது? ஏன்? (07 புள்ளிகள்)

iii. மேலுள்ள இரண்டு அணுகுமுறைகளிலும் ஏதாவது ஒரு முறையினைப் பயன் படுத்தி நீர் எவ்வாறு கேள்வி வளையியினைப் பெறுவீர்? (06 புள்ளிகள்)

3 i. ஒரு நிறுவனத்தின் எல்லை உற்பத்தி (MP) மற்றும் சராசரி உற்பத்தி (AP) வளையிகளிற்கும் எல்லைச் செலவு (MC) மற்றும் சராசரிச் செலவு (AC) வளையிகளிற்கும் இடையிலான தொடர்பினை விளக்குக. (06 புள்ளிகள்)

ii. ஒரு நிறுவனத்தின் நீண்டகால சராசரி மொத்தச்செலவு வளையியானது (LATC) எவ்வாறு அந்நிறுவனத்தின் குறுங்கால சராசரி மொத்தச்செலவு வளையியுடன் (SATC) தொடர்புபட்டுள்ளது? வரைபடத்தினைப் பயன்படுத்தி விளக்குக. (09 புள்ளிகள்)

iii. "நிறைபோட்டிக்கும் தனியுரிமைக்கும் இடைப்பட்டதாகவே தனியுரிமைபோட்டி காணப்படுகின்றது." வரைபடங்களினைப் பயன்படுத்தி இக்கூற்றினை விளக்குக. (10 புள்ளிகள்)

4 i. நிறுவனத்தின் சமனிலை என்பதன் அர்த்தம் என்ன? நிறைபோட்டி மற்றும் தனியுரிமை நிலைமைகளின் கீழ் நிறுவனங்களின் குறுங்கால மற்றும் நீண்ட கால சமனிலைகளுக்கான நிபந்தனைகளை விளக்குக. (13 புள்ளிகள்)

ii. "தனியுரிமையானது தவறான வள ஒதுக்கீட்டிற்குக் காரணமாக அமைவதன் மூலம் சமூகநல இழப்பினை ஏற்படுத்துகின்றது." இக் கூற்றினை நுணுக்கமாக மதிப்பிடுக. (12 புள்ளிகள்)

## பகுதி II

5 i. நுகர்வில் ஏற்படும் ஓர் அதிகரிப்பானது பின்வருவனவற்றின் மீது ஏற்படுத்தும் விளைவு என்னவாக இருக்கும்?

a. முதலீடு (03 புள்ளிகள்)

b. பணவீக்கம் (03 புள்ளிகள்)

c. வேலைமட்டம் (03 புள்ளிகள்)

ii. ஒரு திறந்த பொருளாதார மாதிரியுரு தொடர்பான பின்வரும் தகவல்களைக் கவனத்தில் கொள்க (எல்லா தகவல்களும் மில்லியன் ரூபாவில் தரப்பட்டுள்ளன).

$C = 300 + 0.8Y_d$; $I = 50$; $G = 50$; $T = 20$; $TR = 20$; $X = 100$; $M = 20 + 0.2Y$

இங்கு, $Y$ = தேசியவருமானம்; $Y_d$ = செலவிடத்தகு வருமானம்; $C$ = நுகர்வு; $T$ = வரி; $G$ = அரசாங்கச் செலவீடு; $TR$ = மாற்றல்கள் கொடுப்பனவு; $I$ = தனியார் முதலீடு; $X$ = ஏற்றுமதிகள்; $M$ = இறக்குமதிகள்

a. சமனிலைத் தேசிய வருமானத்தின் பெறுமதியினை நிர்ணயிக்குக. (05 புள்ளிகள்)

b. சமனிலைத் தேசியவருமான மட்டத்தில் நுகர்வுச் செலவீட்டினைக் கணிப்பிடுக. (06 புள்ளிகள்)

c. தனியார் முதலீடு 10 மில்லியன் ரூபாவினால் அதிகரிப்பதாகக் கருதுக. புதிய சமனிலைத் தேசிய வருமானத்தின் பெறுமதியினை நிர்ணயிக்குக. (05 புள்ளிகள்)

6 i. ஒரு நாட்டினுடைய பணநிரம்பலை பரிசீலனை செய்வதில் "விரிந்த பணம்" என்ற எண்ணக்கருவின் முக்கியத்துவம் குறித்து ஆராய்க. (07 புள்ளிகள்)

ii. "பணப்பெருக்கி" என்ற எண்ணக்கருவினைக் கவனத்தில் கொண்டு, பண நிரம்பல் மீது பின்வருவனவற்றின் தாக்கங்களை விளக்குக.

a. மத்தியவங்கியின் பகிரங்க சந்தை நடவடிக்கைக் கொள்கை.

b. மத்தியவங்கியின் கழிவுவீதக் கொள்கை.

c. மத்தியவங்கியின் சட்டரீதியான ஒதுக்குத் தேவைப்பாடுகள்.

(தலா 06 புள்ளிகள்)

7 i பிலிப்ஸ் வளையி எதனை விளக்குகின்றது? (05 புள்ளிகள்)

ii வேலையின்மைக்கான காரணங்கள் மற்றும் அதன் விளைவுகளைச் சுருக்கமாக ஆராய்க. (10 புள்ளிகள்)

iii அமைப்பு ரீதியான வேலையின்மைக்கும் உராய்வு வேலையின்மைக்கும் இடையிலான வேறுபாட்டைக் குறிப்பிடுக. (10 புள்ளிகள்)

8 பின்வருவனவற்றிற்குச் சிறுகுறிப்புக்கள் எழுதுக

i ஒரு திறந்த பொருளாதாரத்தில் நாணயமாற்றுவீத நிர்ணயிப்பில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள்

ii ஒரு நாணயத்தின் பெறுமதியிறக்கமும் பெறுமதித் தேய்வும்

iii பணக்கொள்கையின் குறிக்கோள்கள்

iv திரவப்பொறிநிலை

v பணவீக்க இடைவெளி (தலா 05 புள்ளிகள்)

************************

දුරස්ථ හා අඛණ්ඩ අධ්‍යාපන කේන්ද්‍රය - පේරාදෙණිය විශ්වවිද්‍යාලය
தொடர் தொலைக் கல்வி நிலையம் - பேராதனைப் பல்கலைக்கழகம்
CENTRE FOR DISTANCE & CONTINUING EDUCATION – UNIVERSITY OF PERADENIYA

பொதுக் கலைமாணி (வெளிவாரி பழைய பாடத்திட்டம்) (டிசம்பர் 2018)

# பொருளியல் II
# ECG 2 ஒப்பீட்டுப் பொருளாதார அபிவிருத்தி

எவையேனும் **ஐந்து** வினாக்களுக்கு மட்டும் விடை தருக
இவ்வினாத்தாளில் உள்ள வினாக்களின் மொத்த எண்ணிக்கை 08 ஆகும்.
ஒவ்வொரு வினாவிற்கும் அவற்றில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு புள்ளிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன
( ஒதுக்கப்பட்டுள்ள நேரம்: மூன்று மணித்தியாலங்கள் )

1. (i) மத்திய காலத்தில், பெரிய பிரித்தானியாவில் நிலவிக் காணப்பட்ட மானிய முறையின் பிரதான பொருளாதார அம்சங்கள் யாவை? (10 புள்ளிகள்)
   (ii) அம் முறையின் வீழ்ச்சிக்குப் பங்களிப்புச் செய்த காரணிகளை ஆராய்க. (10 புள்ளிகள்)

2. (i) பெரிய பிரித்தானியாவில் ஏற்பட்ட கைத்தொழில் புரட்சியின் முக்கியத்துவத்தினை விளக்குக. (10 புள்ளிகள்)
   (ii) பெரிய பிரித்தானியாவில் ஏற்பட்ட கைத்தொழில் புரட்சியின் இரண்டாவது கட்டத்தினை அதன் முதலாவது கட்டத்திலிருந்து நீர் எவ்வாறு வேறுபடுத்துவீர்? (10 புள்ளிகள்)

3. **ஒன்றில்** பெரிய பிரித்தானியாவின் **அல்லது** ஜேர்மனியின், கைத்தொழில் அபிவிருத்தியில் விவசாய முறை மாற்றங்களின் வகிபாகத்தினைப் பரிசீலனை செய்க. (20 புள்ளிகள்)

4. பெரிய பிரித்தானியாவிற்குப் பின்னர், கைத்தொழிலாக்கம் அடைந்த ஐரோப்பிய நாடுகளின் பொருளாதார அபிவிருத்திச் செய்முறையில் அரசின் தலையீட்டினை நீர் எவ்வாறு விளக்குவீர்? (20 புள்ளிகள்)

5. **ஒன்றில்** பிரான்சில் **அல்லது** பெரிய பிரித்தானியாவில், நவீன போக்குவரத்து முறையின் உருவாக்கத்தின் பொருளாதார, சமூக முக்கியத்துவத்தினை மதிப்பிடுக. (20 புள்ளிகள்)

6. ஜேர்மனி, பிரான்ஸ், சோவியத் ரஷ்யா ஆகியவற்றில் கவனம் செலுத்தி, காலம் பிந்தி நாடுகள் கைத்தொழில்மயவாக்கம் அடைவதன் அனுகூலங்கள் மற்றும் பிரதிகூலங்கள் குறித்து ஆராய்க. (20 புள்ளிகள்)

7. "சோவியத் ரஷ்யாவின் புதிய பொருளாதாரக் கொள்கையானது, போர்க்காலக் கம்யூனிசத்தின் தவறுகளைச் சரிப்படுத்துவதற்கு முற்பட்டது எனலாம்." போர்க்கால கம்யூனிசத்தினால் தோற்றுவிக்கப்பட்ட பிரச்சினைகளுடன் தொடர்புபடுத்தி அப் புதிய பொருளாதாரக் கொள்கையின் பிரதான நோக்கங்கங்களைப் பரிசீலனை செய்க. (20 புள்ளிகள்)

... 2 →

8. பின்வருவனவற்றுள் எவையேனும் **நான்கினைப்** பற்றிச் சிறு குறிப்புக்கள் எழுதுக:- .

(i) ஸொல்வரின் (Zollverein)

(ii) போர்க்காலக் கம்யூனிசம்

(iii) இரண்டாம் நில அடைப்பு இயக்கம்

(iv) தானியச் சட்டங்கள்

(v) வணிகவாதம் (05 x 04=20 புள்ளிகள் )

---

දුරස්ථ හා අඛණ්ඩ අධ්‍යාපන කේන්ද්‍රය - පේරාදෙණිය විශ්වවිද්‍යාලය
தொடர் தொலைக் கல்வி நிலையம் - பேராதனைப் பல்கலைக்கழகம்
CENTRE FOR DISTANCE & CONTINUING EDUCATION – UNIVERSITY OF PERADENIYA

CDCE

## பொதுக்கலை மாணி (வெளிவாரி பழைய பாடத்திட்டம்) பரீட்சை (டிசம்பர் 2018)

பொருளியல் III

**ECG 3** பிரயோகப் பொருளியல்

எவையேனும் **ஐந்து** வினாக்களுக்கு மட்டும் விடை தருக.
இவ்வினாத்தாளில் உள்ள மொத்த வினாக்களின் எண்ணிக்கை 10
ஒவ்வொரு வினாவுக்கும் ஒதுக்கப்பட்ட புள்ளிகள், அதற்கேற்ப, குறிப்பிடப்பட்டுள்ளன
(நேரம்: மூன்று மணித்தியாலங்கள்)

1. (i) அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் பிரதான அம்சங்களைக் குறிப்பிடுக. (06 புள்ளிகள்)

   (ii) பொருளாதார வளர்ச்சியிலிருந்து, பொருளாதார அபிவிருத்தியினை வேறுபடுத்துக. (06 புள்ளிகள்)

   (iii) கடந்த ஐந்து தசாப்த காலமாக, இலங்கையின் பொருளாதார வளர்ச்சியினைப் பாதித்துள்ள பிரதான காரணிகளைச் சுருக்கமாகக் குறிப்பிடுக. (08 புள்ளிகள்)

2. (i) இலங்கையில் வறுமையினையும், வருமானப் பங்கீட்டினையும் அடையாளம் செய்வதற்கு பயன்படுத்தப்படுகின்ற குறிகாட்டிகள் யாவை? (08 புள்ளிகள்)

   (ii) கடந்த இரு தசாப்த காலப்பகுதியில், இலங்கையினால் முன்னெடுக்கப்பட்டுள்ள வறுமை ஒழிப்பு உபாயங்கள் குறித்து ஆராய்க. (12 புள்ளிகள்)

3. (i) "இலங்கையின் சனத்தொகை வயதுக் கட்டமைப்பானது காலப்போக்கில் மாற்றமடைந்து கொண்டு வந்துள்ளது". இக்கூற்றினை நீர் ஏற்பீரா? உமது விடைக்குக் காரணங்கள் தருக. (10 புள்ளிகள்)

   (ii) முதியோர் சனத்தொகையின் பொருளாதாரத் தாக்க விளைவுகள் யாவை? (10 புள்ளிகள்)

4. (i) இலங்கையில் இளம் வயதினர் மத்தியில் உயர் வேலையின்மை நிலவுவதற்கான காரணங்களை ஆராய்க. (10 புள்ளிகள்)

   (ii) இதனைக் குறைப்பதற்கு இலங்கை அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ள கொள்கை நடவடிக்கைகள் தொடர்பாகக் கருத்துரைக்குக. (10 புள்ளிகள்)

5. (i) உள்நாட்டு விவசாயத்திற்கும், ஏற்றுமதி விவசாயத்திற்கும் இடையிலான வேறுபாடுகள் யாவை? (05 புள்ளிகள்)

   (ii) இலங்கையில் உள்நாட்டு விவசாயத் துறையினால் எதிர்நோக்கப்படுகின்ற பிரதான பிரச்சினைகளை ஆராய்க. (15 புள்ளிகள்)

6. (i) இறக்குமதி பதிலீட்டுக் கொள்கை, ஏற்றுமதி நோக்கிய கைத்தொழில் கொள்கை என்பவற்றிற்கு இடையிலான வேறுபாடுகளைச் சுருக்கமாக விளக்குக. (08 புள்ளிகள்)

(ii) 1977 இற்குப் பின்னர், ஏற்றுமதித் துறையினை முன்னேற்றுவதற்கு, இலங்கை அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் யாவை? (12 புள்ளிகள்)

7. (i) இலங்கையின் ஏற்றுமதி இறக்குமதித் துறைகளின் கட்டமைப்பு மாற்றங்களைக் குறிப்பிடுக. (10 புள்ளிகள்)

(ii) இம்மாற்றங்களுக்குப் பங்களிப்புச் செய்த காரணிகள் குறித்துக் கருத்துரைக்குக. (10 புள்ளிகள்)

8. (i) இலங்கையின் தற்போதைய வரிக்கட்டமைப்பினை விபரிக்குக. (05 புள்ளிகள்)

(ii) சமீப காலத்தில் ஏற்பட்ட இம்மாற்ங்களுக்கான காரணங்களைக் குறிப்பிடுக. (07 புள்ளிகள்)

(iii) இன்று இலங்கையின் இறைக் கொள்கை எதிர்நோக்குகின்ற முக்கிய பிரச்சினைகள் குறித்து ஆராய்க. (08 புள்ளிகள்)

9. (i) இலங்கையின் ஏற்றுமதி விவசாயத் துறையின் முக்கியத்துவத்தினைச் சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)

(ii) ஏற்றுமதி விவசாயத் துறையினை முன்னேற்றுவதற்கு இலங்கை அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் யாவை? (15 புள்ளிகள்)

10. இலங்கை தொடர்பாகப் பின்வருவனவற்றுள் எவையேனும் **<u>நான்கினைப்</u>** பற்றிச் சிறு குறிப்புக்கள் எழுதுக:

(அ) பிறப்பு வீதத்தினை நிர்ணயிக்கும் காரணிகள்
(ஆ) இறக்குமதியின் உள்ளடக்கக் கூறுகள்
(இ) உள்நாட்டு விவசாயத் துறையில் தனியார் பங்கெடுப்பு
(ஈ) இறுப்புச் சீர்திருத்தங்கள்
(உ) வர்த்தக இடைவெளி
(ஊ) பெருந்தோட்டத் துறையின்மீது நிலச் சீர்திருத்தத்தின் தாக்கங்கள் (தலா 05 புள்ளிகள்)

---